கடன் அடைய முடியாத நிலைமையில் பல மனைகள் காலியாக இருந்தன எனவும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டது. ஆனையால் மேலே கூறிய தடையை 5 ஆண்டு களுக்கு நிறுத்தி வைக்கலாம் என்று 1969-ஆம் ஆணடு செப்டம்பர் திங்களில் உத்தரவிடப்பட்டது. பின்னர் இந்த பிரச்சினையை அரசு மறு பரிசீலனை செய்து 1972-ஆம் ஆண்டு மே திங்களில் இந்தத் தடையை முழுவதும் நீக்க ஆணை பிறப்பித்துள்ளது.

THIRU N. DENNIS : Sir, may I know whether the Government have issued orders for stoping financial assistance to the Co-operative Building Societies ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட திட்டம் எதுவும் தற்போது இல்லை.

சீரணித் தொண்டர்கள்.

* 351 வினு—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைப் பேருந்து நிற்குமிடங்களில் பணியாற்றும் சீரணித் தொண்டர்களை முழு நேர ஊழியர்களாக நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தச் சீரணித் தொண்டர்கள் போக்குவரத்துத் துறைக்கு மிகவும் சிறப்பாக உதவி செய்து கொண்டு இருக்கிறார்கள். எனவே போக்குவரத்துத் துறைக்கு வேலைக்காக ஆட்கள் சேர்க்கப்படும்போது இந்தச் சீரணித் தொண்டர்களுக்கு முதலிடம் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சென்னை நகர போக்குவரத்துப் பொறுத்தவரையில் சீரணித் தொண்டர்கள் நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள் என்பது உண்மை. ஆனால் அதே நேரத்தில் அவர்களைத் தான் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்வது சரியல்ல. தகுதி, மற்றவையெல்லாம் ஒன்றாக இருக்குமானால், வெளியே இருந்து வேலைக்கு ஆட்களை எடுக்கும்போது, சீரணித் தொண்டர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.

திரு நா. வீராசாமி : தலைவரவர்களே, முழு நேர வேலைக்கு அவர் களை எடுப்பதற்கு வாய்ப்பு இல்லையென்றாலும், அன்றாடம் பீக்-அவர்சில் அந்தச் சீரணித் தொண்டர்களின் சர்வீஸ்களைபயன்படுத்திக் கொள்ள அரசு முன்வருமா ?

1972 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இப்போது நெரிசல் பகுதிகளில் மட்டும் சீரணித் தொண்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக 50 இடங்களில் அவர்கள் பயன்படுத்தப்படு கிறார்கள். அதை மேலும் 25 இடங்களுக்கு கூடுதலாக்கும் யோசனை போக்குவரத்துத் துறையின் பரிசீலனையில் உள்ளது.

சென்னை-போரூந்தவாக்கம் பேருந்துகள்

*352 வினா—திரு கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வழித்தடம் எண் 113 (சென்னை-போரூந்தவாக்கம்) பேருந்துகளை தேர்வாய் வரை சென்று திரும்புமாறு செய்வதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : வழித்தடம் எண் 113-A (தங்கசாலை-போரூந்தவாக்கம்) செல்லும் பேருந்துகள் 19—6—1972 முதல் காலையில் ஒரு முறையும் மாலையில் ஒரு முறையும் தேர்வாய் கிராமம் வழியாகத் திருப்பிவிடப்பட்டுள்ளன.

திரு கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த 113-A பேருந்து கள் காலையில் ஒரு முறையும், மாலையில் ஒரு முறையும் தான் தேர்வாய் கிராமம் வழியாகச் செல்லவேண்டுமா ? அந்த வழியே செல்லும் எல்லாப் பேருந்துகளையும் தேர்வாய் கிராமம் சென்று வருவதற்கு உடனடியாக அரசு ஆணைப் பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : போதுமான பயணிகள் இருப் பார்களேயானால் அதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

Temple Lands in Madras

*353. *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether lands of the temples at Madras City have been given to the State Slum Clearance Board ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) ஒரு விவரப் பட்டியல் [a]அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, ஏழைகளுக்கு வீடுகள் கட்டித் தருவதற்காக குடிசை மாற்று வாரியத்திற்கு தரப்பட்ட நிலங்கள் மிகவும் குறைந்த விலைக்குத் தரப்பட்டதாகச் சொல்கிறார்களே, அது அரசுக்குத் தெரியுமா ?

---

[a]526—527-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.